Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO:CC.No.20/2011**

**Prosecution witness – PW – 8**

| | | | |
|---|---|---|---|
| **DATE** | **: 05.01.2024** | | |
| Name | : திரு.துரை | Caste | : |
| Father'SName | :. த/பெ.பெருமாள் | Calling | : |
| Village/city | : வன்னிப்பேர் | Religion | : |
| Taluk | : | Age | : 56 |

( எதிரி 11, 15 ஆஜரில்லை, எதிரி 1, 8, 9, 12, 14, 16 இறந்து விட்டனர். மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் விவசாய பேலை செய்து வருகிறேன். பிரம்மதேசம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி எங்கள் ஊர் அருகில் உள்ளது. அதில் நான் உறுப்பினராக இருந்தேன். அந்த வங்கியில் சுமார் 30 வருடத்திற்கு முன்பு கரும்பு பயிர் வைப்பதற்காக ரூ.8000 லோன் வாங்கினேன். மறுவருடமே அந்த தொகையானது கரும்பு ஆலையில் இருந்து வங்கிக்கு நேரடியாக பணம் அனுப்பி அந்த கடனை பைசல் செய்து வங்கி எடுத்துக்கொண்டு மீத தொகையான சுமார் ரூ. 4000 என்னிடம் கொடுத்தார்கள். அதன்பின்னிட்டு நான் வங்கி பக்கம் செல்லவில்லை. வங்கியின் செகரட்டரி என்னுடைய பெயரை பயன்படுத்தி பணம் வாங்கியதாக தெரிந்து கொண்டேன். நான் அதன்பின்னிட்டு கடன் எதுவும் வாங்கவில்லை. என்னை போலிசார் மட்டும் விசாரணை செய்தார்கள்.

**அனைத்து எதிரி தரப்பு வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை**

விழுப்புரம் போலிசார் முறைகேடு சம்மந்தமாக என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் ஆமாம். என் பெயரை பயன்படுத்தி கடன் வாங்கிய விவரம் எனக்கு இன்று தான் தெரியவந்தது என்றால் ஆமாம். அந்த கடனை நான் தான் வாங்கினேன் என்றும் அரசாங்கம் தள்ளுபடி செய்துவிடும் என்று விட்டுவிட்டு தற்போது யாரோ வாங்கியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வங்க அதிகாரிகள் யாரும் விசாரணை தேதிக்கு முன்பாக என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் ஆமாம்.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்